# தகவல் தாள்: பட்டியலிடுதல் மற்றும் வழிபாட்டுத் தலங்கள்
பிப்ரவரி 2025

### நாங்கள் யார்?

- Historic England நம் அனைவருக்குக் முக்கியமான பாரம்பரியத்தைப் பாதுகாத்து அதற்கு உயிரூட்டுகிறது, இதன் மூலம் அது நீண்ட காலம் நிலைத்திருந்து அனைவரின் விருப்பத்திற்குரியதாகிறது. இதில் அடங்குபவை கட்டிடங்கள், பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள் போன்ற வடிவமைக்கப்பட்ட நிலப்பரப்புகள், தொல்பொருளியல் மற்றும் பல.

### பட்டியலிடப்பட்ட கட்டிடங்கள் என்றால் என்ன?

- பட்டியலிடுதல் நாடு முழுவதும் உள்ள சிறப்புக் கட்டிடங்களுக்கு **சட்டப்பூர்வ பாதுகாப்பை** வழங்குகிறது. பட்டியலிடுதலின் மூலம் பாதுகாக்கப்பட்ட கட்டிடங்கள் **பட்டியலிடப்பட்ட கட்டிடங்கள்** என்றழைக்கப்படுகின்றன.
- ஒரு கட்டிடத்தைப் பட்டியலிட Historic England -க்கு யார் வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம் - விண்ணப்பிக்க நீங்கள் கட்டிடக்கலை அல்லது வரலாற்று நிபுணராக இருக்க வேண்டிய அவசியமில்லை.
- Historic England பட்டியலிடப்படுவதற்கான விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து அதற்கான இறுதி முடிவுகளை எடுக்கும் Department for Culture, Media and Sport -க்குப் (கலாச்சாரம், ஊடகம் மற்றும் விளையாட்டு துறை) (DCMS) பரிந்துரைகள் செய்கிறது.
- பட்டியலிடுவதற்கு ஒரு கட்டிடத்தை நாங்கள் மதிப்பீடு செய்யும்போது, அதற்கு **சிறப்பு முக்கியத்துவம்** உள்ளதா எனப் பார்ப்போம். இதன் பொருள் கட்டிடத்தை பட்டியலிடுவதன் மூலம் சிறப்பானதாகவும் பாதுகாப்புக்கு தகுதியானதாகவும் ஆக்கும் விஷயங்கள் என்பதாகும்.
- இந்த சிறப்பு முக்கியத்துவம் கட்டிடத்தின் **கட்டிடக்கலை** (அது பார்க்க எவ்வாறு இருக்கிறது, அது எவ்வாறு கட்டமைக்கப்பட்டது) என்பதன் காரணமாக, அதன் **வரலாறு** (உதாரணமாக தேசிய அளவில் முக்கியமான நபர் அல்லது நிகழ்வுடன் வலுவான தொடர்பு) காரணமாக அல்லது **இரண்டின் இணைவின்** காரணமாக இருக்கலாம்.
- கட்டிடங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதைப் பொருத்து அவை கிரேடு II, II* அல்லது I என பட்டியலிடப்படலாம். பெரும்பாலான (கிட்டத்தட்ட 92%) கட்டிடங்கள் கிரேடு II -இல் பட்டியலிடப்படுகின்றன.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அனைத்துக் கட்டிடங்களுக்கும் சிறப்பு முக்கியத்துவம் இருக்காது. மேலும் இந்த வரன்முறையைச் சந்திக்காத கட்டிடங்களைப் பாதுகாக்கவும் கொண்டாடவும் வேறு வழிகள் இருக்கின்றன.

### National Heritage List for England என்றால் என்ன?

- பட்டியலிடப்பட்ட ஒவ்வொரு கட்டிடத்தின் பதிவும் (பட்டியல் உள்ளீடு என அழைக்கப்படுகிறது) National Heritage List for England -இல் (இங்கிலாந்தின் தேசிய பாரம்பரிய பட்டியல்) (NHLE, அல்லது பட்டியல் என அழைக்கப்படுகிறது), **இங்கிலாந்தின் பாதுகாக்கப்பட்ட பாரம்பரியம்** குறித்த தகவல்களைக் கொண்ட பொது தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

### எங்கள் பட்டியலிடப்பட்ட வழிபாட்டுத் தலத்தில் நாங்கள் மாற்றங்களைச் செய்ய முடியுமா?

- ஒரு கட்டிடம் பட்டியலிடப்பட்டவுடன், அதன் சிறப்பு முக்கியத்துவத்தைப் பாதிக்கக்கூடிய மாற்றங்கள் திட்டமிடல் அமைப்பின் மூலம் கையாளப்பட வேண்டும்.
- இது கட்டிடத்தில் செய்யப்படும் மாற்றங்கள் மற்றும் மேம்பாடுகளைத் தடுக்காது, ஆனால் கட்டிடத்தின் சிறப்பு முக்கியத்துவத்தைப் பாதிக்கக்கூடிய மாற்றங்கள் எதையும் செய்வதற்கான அனுமதிக்கு நீங்கள் **பட்டியலிடப்பட்ட கட்டிட ஒப்புதலைப்** (ஒரு வகையான அனுமதி) பெற வேண்டும். நீங்கள் பட்டியலிடப்பட்ட கட்டிட ஒப்புதலுக்கு (அல்லது வேறு சட்டப்பூர்வத் தேவைக்கு) விண்ணப்பிக்க வேண்டுமா என்பதைக் கண்டறிய, உங்கள் உள்ளூர் Historic England அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும் (கீழே பார்க்கவும்).
- பட்டியலிடப்பட்ட கட்டிட ஒப்புதல் விண்ணப்பங்கள் மீதான முடிவுகள் **உள்ளூர் திட்டமிடல் ஆணையத்தால்** எடுக்கப்படும். சில சந்தர்ப்பங்களில், உள்ளூர் திட்டமிடல் அதிகாரிகள் Historic England-க்குத் தெரிவிக்க வேண்டும் அல்லது அவர்களுடன் ஆலோசிக்க வேண்டும்.

### பட்டியலிடப்பட்ட கட்டிடங்களைப் பயன்படுத்தும் மதக் குழுக்களுக்கு Historic England எவ்வாறு ஆதரவளிக்கிறது?

- வழிபாட்டிற்காகவும், மற்ற பயன்பாடுகளுக்காகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களை பயன்படுத்தும் மத சமூகங்களுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம்.

- வழிபாட்டுத் தலங்களை பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்த, அவற்றை விவேகமான வகையில் மாற்றியமைப்பது மற்றும் புதிய வசதிகளை நிறுவுவது குறித்து நாங்கள் ஆலோசனைகளை வழங்குகிறோம். காலநிலை மாற்றங்களைத் தாங்கக்கூடியவாறு தங்கள் கட்டிடங்களை மாற்ற நினைக்கும் மத சமூகங்களுக்கும் நாங்கள் ஆலோசனைகளை வழங்க முடியும்.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடத்தைப் பராமரிக்கும் மத சமூகங்களுக்குக் கிடைக்கக்கூடிய மானியங்கள் குறித்தும் நாங்கள் ஆலோசனை வழங்க முடியும்.

### வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பிற மதரீதியான கட்டிடங்களைப் பட்டியலிட முடியுமா?

- இங்கிலாந்தின் தேசிய பாரம்பரியப் பட்டியலில் கிட்டத்தட்ட 380,000 பட்டியலிடப்பட்ட கட்டிடங்களின் உள்ளீடுகள் உள்ளன. இதில் 16,000 வழிபாட்டுத் தலங்களும் அடங்கும். பட்டியலிடப்பட்ட வழிபாட்டுத் தலங்களில் பல வகையான மத சமூகங்கள் பயன்படுத்தும் கட்டிடங்கள் அடங்கும்.
- சில சமயங்களில் ஒரு பட்டியலிடப்பட்ட கட்டிடத்தை அது கட்டப்பட்ட நேரத்திலிருந்து ஒன்றுக்கும் மேற்பட்ட வேறுபட்ட மதக் குழுக்கள் பயன்படுத்தி வருகின்றன. உதாரணமாக வூல்விச்சில் உள்ள குருத்வாரா சாஹிப். இது முதலில் ஒரு மெதடிஸ்ட் தேவாலயமாக கட்டப்பட்டு 1970களில் சீக்கிய சமூகத்தின் பயன்பாட்டிற்காக மாற்றியமைக்கப்பட்டது.
- பள்ளிகள், தியேட்டர்கள் மற்றும் திரை அரங்கங்களாக முதலில் கட்டப்பட்டு பின்னர் மத சமூகங்களால் பயன்படுத்தப்படும் பட்டியலிடப்பட்ட கட்டிடங்களும் உள்ளன. இதில் ஹாரோவில் உள்ள முன்னர் ஏஸ் சினிமாவாக இருந்த இப்போதைய ஐரோப்பாவுக்கான ஜோராஸ்டிரியன் மையமும் அடங்கும்.
- பட்டியலிடுவதின் மூலம் கட்டிடங்களைப் பாதுகாப்பதால் மக்கள் சிறப்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களில் வழிபடலாம், இதன் மூலம் அவர்களின் சமூக உணர்வை மேம்படுத்த உதவமுடியும். இங்கிலாந்தின் பட்டியலிடப்பட்ட 60 க்கும் மேற்பட்ட வழிபாட்டுத் தலங்களில் நடாத்தப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பில், 88% பேர் தங்கள் பட்டியலிடப்பட்ட வழிபாட்டுத் தலம் சமூக மனப்பான்மைக்கு பங்களித்தது என்று ஒப்புக்கொண்டனர்.[1]

### சொற்களஞ்சியம்:

- ***மத சமூகம்*:** ஒரே நம்பிக்கை பாரம்பரியத்தைப் பகிர்ந்து கொள்ளும், ஒரே இடத்தில் வழிபடும் மக்கள் குழு. சில மதங்களில் இந்த சமூகம் சமயக் கூட்டம் என்று அழைக்கப்படலாம்.
- ***வழிபாட்டுத் தலங்கள்*:** வழிபாட்டுத் தலங்களில் தேவாலயங்கள், ஜெப ஆலயங்கள், குருத்வாராக்கள், கோயில்கள், மசூதிகள் போன்றவை அடங்கும். இவற்றில் வழிபாட்டுத் தலங்களாக பயன்படுத்த மாற்றியமைக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களும் அடங்கலாம்.
- ***திட்டமிடல் அமைப்பு*:** இங்கிலாந்தில் உள்ள அனைத்து நிலங்கள் மற்றும் கட்டிடங்களின் பயன்பாடு மற்றும் மேம்பாடு திட்டமிடல் அமைப்பால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதில் ஏற்கனவே உள்ள கட்டிடங்களில் பெரிய மாற்றங்களைச் செய்வதும் புதிய கட்டிடங்களைக் காட்டுவதும் அடங்கும். இந்த அமைப்பு சரியான மேம்பாடு சரியான இடத்தில் சரியான நேரத்தில் நடப்பதை உறுதி செய்கிறது.

### உங்கள் உள்ளூர் Historic England அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்:

- **North West:** northwest@HistoricEngland.org.uk
  *Cheshire, Cumbria, Greater Manchester, Lancashire & Merseyside*
- **North East:** northeast@HistoricEngland.org.uk
  *County Durham, Newcastle, Northumberland, Tees Valley, Tyne and Wear*
- **Yorkshire:** yorkshire@HistoricEngland.org.uk
  *East Riding of Yorkshire, Kingston upon Hull, North, South and West Yorkshire, York*
- **East of England:** eastofengland@HistoricEngland.org.uk
  *Bedfordshire, Cambridgeshire, Essex, Hertfordshire, Norfolk, Suffolk*
- **South West:** southwest@HistoricEngland.org.uk
  Bristol, Cornwall, Devon, Dorset, Gloucestershire, Isles of Scilly, Somerset, Wiltshire
- **Midlands:** midlands@HistoricEngland.org.uk
  *Herefordshire, Shropshire, Staffordshire, Warwickshire, West Midlands, Worcestershire, Derbyshire, Leicestershire, Lincolnshire, Northamptonshire, Nottinghamshire, Rutland*
- **London & South East:** londonseast@HistoricEngland.org.uk
  *Greater London, Berkshire, Buckinghamshire, East Sussex, Hampshire, Isle of Wight, Kent, Oxfordshire, Surrey, West Sussex*

---

[1] ஆங்கில பாரம்பரியம் மற்றும் உயிருள்ள கற்கள் (2010) 'சுகமா சுமையா? பட்டியலிடப்பட்ட வழிபாட்டுத் தலங்கள் மற்றும் சமூகங்களில் அவற்றின் பங்கு'

தகவல் தாளின் மொழிபெயர்க்கப்பட்ட பதிப்பு கிடைக்கும் மொழிகள்:

- **ரோமானியன்** română
- **பஞ்சாபி** ਪੰਜਾਬੀ
- **உருது** اردو
- **தமிழ்** தமிழ்
- **மலையாளம்** മലയാളം

**historicengland.org.uk**